UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# எங்கதெ புதினத்தின் கதைக் களமும் பாத்திரமும்

**கு. கோபிநாத்,** (பதிவு எண்: R20162850)
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்

**முனைவர் மு. இராஜலெட்சுமி**
ஆய்வு நெறியாளர், தமிழ் உயராய்வு மையம்
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்துப்பேட்டை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வருகிறது. ஒன்றிலிருந்து ஒன்றாய்ப் பரிணமித்துப் பழையன கழிதலும் புதியன புகுதலுமாய் பல்வேறு இலக்கியங்கள் தோன்றுகின்றன. இவ்வளர்ச்சிக்கு உதவிய தமிழ்ப்படைப்பாளர்களின் தொண்டு போற்றுதலுக்குரியது. தனது படைப்புகளின் வழி, சமுதாயக் கேடுகள் மறைந்து மறுமலர்ச்சி பெற்ற புதிய சமுதாயம் அமைய படைப்பாளர்கள் தொண்டாற்றியுள்ளனர். அந்தவகையில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வகையில் புதினம் பரவலான வாசிப்பிற்கும், ஆராய்ச்சிக்கும் உட்படுத்தப்படுகின்றன. அவற்றுள் எங்கதெ புதினத்தின் கதைக் களமும் பாத்திரமும் எனும் தலைப்பில் ஆராய்ந்து வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாக அமைகிறது.

**முதன்மைச் சொற்கள்**

கதைக்களம், பாத்திரப்படைப்பு, கதைமாந்தர்கள், தொன்மை, விதவைப்பெண் மனநிலை.

**முன்னுரை**

மேலை நாட்டினர் தொடர்பால் தமிழ் மொழிக்கு கிடைத்த வரவுகளில் புதின இலக்கியமும் ஒன்றாகும். தற்போது புதின இலக்கியம் தனக்கென ஓர் இடத்தினைப் பெற்று பெரும் இலக்கிய பரப்பை உருவாக்கியுள்ளது. மேலும் புதினத்தின் இன்றியமையாதது கதைக் கருவாகும். கதைப் படிப்பவரின் மனதினைப் பிணைப்பது புனை கதைகள் எல்லாம் நாட்டினரின் பொதுச் சொத்தாகும். ஆனால் படைப்பாளர்கள் படிப்பவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப கதையை அமைக்கின்றனர். அவ்வாறு தான் அமைக்கும் கதைகள் ஏதேனும் ஒரு கருத்தை நுட்பமாக கூறுகின்றனர். அதுவே கதையின் கதைக் களமாக அமைகிறது. புதினத்தின் உயிர் துடிப்பாக கதைக்களம் விளங்குகின்றது.

ஒரு படைப்பின் அடிப்படையான கருத்துக்கள் தான் அப்படைப்பிற்கு அழகிய வடிவத்தை; கொடுக்கிறது. ஒரு புதினத்தின் கட்டமைப்பின் மூலம் ஆசிரியரின் கலைத் திறனை உணர்ந்து கொள்ள முடிகிறது. இலக்கியப் படைப்பில் பல்வேறு கருத்துகள் இணைந்து ஒரு கட்டமைப்பைத் தருகின்றன. இக்கட்டமைப்பில் புதிய உணர்வினைக் காண முடிகிறது. புதின இலக்கியத்தின் உயிர்த்துடிப்பாக இருப்பது கதைக்களம், அதன் கட்டமைப்பு பாத்திரம் இவைகள் இமையம் எங்கதெ புதினத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கதைக்களம்**

கதை நிகழும் இடம் கதைக்களம் என்று சுருக்கமாகச் சொல்லலாம். ஒரு கதை என்பது அதன் கதைத் தலைவனைச் சுற்றி பின்னப் படுவதாகும். ஒரு மனிதனின் செயல்கள், பண்புகள், ஒழுக்கங்கள் அவன் சார்ந்த மண்ணின் தன்மையைப் பொருத்து அமையும் என்பது உலகியல் உண்மை. **"நிலத்திற்குத் தகுந்த கனியும், குலத்திற்குத் தகுந்த குணமும் என்னும் தமிழ்ப் பழமொழி இந்த உண்மையை உணர்த்தும் சான்றாகும்."(1) (கழகப் பழமொழி அகரவரிசை ப.25)**

இடம் கதையில் முதலிடம் பெறுவது நம் மண்ணின் மரபு. பாட்டி கதை கூட ஒரு ஊரிலே ஒரு ராசா என்றும், ஊர் என்றும் இடத்தைக் குறிப்பிட்ட பிறகே ராசா என்னும் கதைக் தலைவனைச் சுட்டுவது ஒரு வழக்கமாக இருப்பதைக் காணலாம். பாட்டி கதை வழக்காறு தமிழ் மன்னின் தொன்மை யான இலக்கிய மரபு சார்ந்ததாகும்.

**கதைக்களப் பின்னனியின் பழமை**

சங்க இலக்கியங்கள் என்பன சிறுசிறு பாடல்கள் என்றாலும் அவை அனைத்தும் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை உணர்ச்சியோடு சித்தரிக்கும் குறுங்கதைகள் எனலாம். அக்கதைகளைக் கூறும் பாடல்களில் கதைக்களப் பின்னனி கருதப்பட்டுள்ளதை இலக்கணம் காட்டுகின்றது.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடுங் காலை"(2)

(தொல்.பொருள்.அகத்.நூ.949)

"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே"(3)

என்னும் நூற்பாக்களில் இடத்தையும், பொழுதையும் முதல் பொருளாக சுட்டிய பிறகே கதையைக் கூற வேண்டும் என்பது இலக்கணமாக வரையறுக்கப்பட்ட உண்மை என்பதை அறிய முடிகிறது.

அகத்திணைப் பாடல்கள் நிலத்தின் அடிப்படையிலேயே ஐந்து திணைகளாகப் பகுக்கப்பட்டன. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. காடும் காடு சாரந்த நிலமும் முல்லை எனவும், வயலும் வயல் சார்ந்த நிலம் மருதம் எனவும், கடலும் கடல்சார்ந்த நிலம் நெய்தல் எனவும் பெயர் பெற்றன. முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து நல்லியல்பு இழந்த வறண்ட நிலம் பாலை எனப்பட்டது. இந்த ஐவேறு நிலங்களில் மக்கள் நாகரிகமும் வேறுபட்டிருந்ததைச் சங்க இலக்கியங்களும் அவற்றிற்கு முன் தோன்றிய தொல்காப்பிய அகத்திணை இலக்கணமும் நமக்குக் காட்டுகின்றன. குறிஞ்சிநில மக்கள் வேட்டை யாடுவதிலும், வீரத்திலும், காதலிலும் சிறந்த வர்களாக இருந்தனர். மருதநில மக்கள் வயல்களில் விளைச்சலைப் பெருக்குவதிலும் விளைந்ததைக் கொண்டு விருந்தோம்புதலி லும் சிறந்து விளங்கினர். பாலைநில மக்கள் வழிப்பறி செய்தல் வன்கொலை புரிதல் முதலிய மறச் செயல்களில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். களத்திற்கு ஏற்பவே அங்கு வாழும் மாந்தர் தம் ஒழுக்கம் அமையும் என்ற உண்மையைத் தொல் காப்பியம் விளக்கி நிற்கின்றது.

**கதைத் தொடக்கம்**

ஒரு நாவலின் தொடக்கம் நாவலை முழுவதும் தொடர்ந்து படிக்குமாறு அமைய வேண்டும். அது மட்டுமின்றி நல்ல நாவல் என்ற எண்ணத்தைக் உருவாக்க வேண்டும். **"ஒரு நாவல் குறிப்பிட்ட சூழலைக் காட்டிலும் கதையின் தலைமை மாந்தரை அறிமுகப்படுத்தியும் அவர்களது செயல்க ளைக் காட்டிலும் இயற்கை காட்சியை சித்தரித்தும் அமைதல் வேண்டும். இதனை நாவலின் தொடக்க நுழைவாயிலாக அமைந்து வாசகர்களைப் புதிய அறியாத உலகிற்கு அழைத்துச் செல்கிறது. வாசகரின் சிந்தையில் விடாது வற்புறுத்தவும் மறுபடியும் நிகழ்வுறுத்தவும் ஆற்றுப்படுத்துவதாக அது விளங்க வேண்டும்"(4)** என்று தண்டாயுதம் குறிப்பிடுகின்றார்.(சமூகநாவல்ப.178)

**எங்கதெ பெயர் விளக்கம்**

எங்கதெ என்னும் சொல்லுக்குப் பல பொருள் உண்டு. பத்து வருடம் அவளுடன் வாழ்ந்த வாழ்வைப் பற்றிய கதை தான் இந்த நாவல். முப்பத்தி மூன்று வயதாகிற வனுக்கு கமலா என்கின்ற இருபத்தொட்டு வயதாகின்ற விதவையுடன் ஏற்படுகின்ற நட்பு உறவுமுறை கூறப்படுகின்றது. தன்னைப் பற்றிப் பேசுகின்ற நினைவு இல்லாதவன், இக்கதையைச் சொல்றவன் படித்திருந்தும் வேலைக்குப் போகாதவன், வெட்டியாய்

சுத்துறவன், படித்தும் வேலை இல்லாதவன் என்று கூறப்படுகிறது. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உண்டாகின்ற கூடா ஒழுக்கம் பற்றியது என்பது அவர்களின் நம்பிக்கை யாகும். இந்த நிலையில் புதினத்திற்கு எங்கதெ என்னும் பெயர் மிகவும், பொறுத்த மாக அமைந்துள்ளது.

**எங்கதெ கதைக்களம்**

எங்கதெ புதினத்தின் கதையில் பல வாய்ப்புகள் இருந்தும் வரம்பு மீறப்பட வில்லை. முறை தவறி நடக்கும் மகனைத் தடுக்க வழியின்றி தவிக்கும் குடும்பம். வேலைச் சூழலில் இளம் விதவைகளைப் பார்க்கும் கண்ணோட்டம் கிராமத்திலிருந்து வேலைக்காகவும் பிழைப்புக்காகவும் நகரத்தி ற்கு இடம் பெயரும் மனங்கள் எனப் பல தளங்களில் இக்கதை பயணிக்கின்றது. அதுபோல் பெண் படித்துப் பதவியில் இருந்தாலும் மனரீதியாகவும் உடல் ரீதியாக வும் ஆணிடம் அடிமையாக்கப்படுகிறாள் என்பதை இக்கதையில் சொல்லப்படுகிறது.

**இது எங்கதெ பத்து வருசத்துக் கதை**

**என் ரத்தம் என் கண்ணீர்**

என முதல் வரியே உணர்ச்சிப் பூர்வமாய்த் தொடங்கி வாசகர்களை உள்ளிழுத்துக் கொள்கிறது. கடலூர் பேச்சு வழக்கில் எழுதப்பட்டுள்ள பெருமாள் முருகன், நாஞ்சில் நாடன், கி.ரா. போன்றவர்களின் வழியாக மற்ற பேச்சு வழக்கு நூல்கள் தோன்றுகிறது. கமலா வேலைக்கு செல்லும் அலுவலகத்தில் தகராறு ஏற்படுகின்றது. ஒரு பெண் ஆணின் தொடர்பு ஒரு விதம் கூடா நட்புறவு என்று கூட சொல்லலாம்.

கள்ளக் காதலனைக் கொன்ற காதலி கைது என்றும் கள்ளக் காதலன் கைது போன்ற தலைப்புகள் செய்தித்தாள்களில் அன்றாடம் நாம் எளிதாகக் கடந்து செல்லும் விஷயம், ஆனால் எங்கதெ அது மாதிரியான ஒரு நிகழ்வை உற்றுப் பார்க்கிறது. அப்படியான தொரு வாழ்க்கையை நம் கண்முன்னே நிகழ்த்திக் காட்டுகிறது. அதில் சம்பந்தப் பட்டவர்களுடன் தொடக்கம் முதல் முடிவு வரை நம்மை பயணிக்க வைக்கிறது.

இரண்டு குழந்தைகள் கொண்ட கமலா என்ற இளம்பெண் கணவனை இழந்தவள். மேல் சாதியைச் சார்ந்தவள். அவளுடன் கிராமத்தில் இருக்கும் கீழ் மத்தியவர்க்க இடைநிலை சாதி ஆண் கொள்ளும் தகாத உறவு அது ஏற்படுத்தும் சமூக மாற்றம் அகச் சிக்கல்கள் தான் எங்கதெயின் கதைக் களமாகும்.

**கமலா**

எங்கதெ புதினத்தின் முதன்மை கதை மாந்தராக கமலா என்ற பாத்திரம் படைக்கப் பட்டுள்ளது. அவள் ஒரு படித்த குடும்பத்தைச் சேர்ந்தவள். கமலாவுக்கு சொந்த ஊர் விழுப்புரம் பக்கம் தாழைப்பூத்து அவள் கணவன் தொடக்கப்பள்ளி ஆசிரியராக பணிபுரிந்தார். திடீரென ஒரு நாள் சென்னை ரோட்டில் லாரியில் அடிப்பட்டு இறந்து விடுகிறான். அதனால் கமலாவுக்கு கருணை அடிப்படையில் வேலை கிடைக்கின்றது. பி.எஸ்.சி படித்திருந்தாள். கமலாவுக்கு இரண்டு பெண் குழந்தைகள். அக்குழந்தை களை வேலை பார்த்த ஊரில் இருந்த பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்டது. கமலா இளம் வயது கணவன் இல்லாதவள். அதனால் கமலா மேல் மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டனர். கமலா தலைமை யாசிரியரிடம் வேலை பார்ப்பவர்க்கு தனி ஓய்வு அறை வேண்டும் என்று கூறினாள். கமலா எப்பொழுதும் போன் பேசினா வந்த மாரியே சரசரன்னு காச விட்டெறிஞ்சுட்டு போயிடுவாள்.

**“கமலா வந்திட்டுப் போன ஒரு பறவ வந்திட்டுப் போன மாரியே இருக்கும். காத்தடிக்கவே காத்திருந்த எல மாரி விழுந்திட்டன். அடுத்த பத்து, இருபது நாளிலியே நானே வெதயத் தூவிட்டன். அந்த வெதய மொளைக்க வைக்கிற மாரி தான் கமலாவும் கடக்கி வந்துக் கிட்டிருந்தா”**(5) (இமையம், எங்கதெ,ப.5)

ஆனா கமலா மட்டும் தான் வண்ணான் உண்மை பெயர் வெங்கடேசன்னு கூப்பிடு வாள். குருவம்மா கமலாவை கெட்டிக்காரி என் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கின்ற சாமி என்று சொன்னாள். அதனால், கமலாவுக்கு மரியாதை ஏற்படு கிறது. கமலா விநாயகம் வீட்டிற்கு ஒரு முறை வந்தாள். விநாயகம் தாத்தா இறப்புக்கு விடு முறை போட்டு அன்றைய நாள் முழுவதும் கமலா விநாயகம் வீட்டில் இருந்தாள். எல்லா ரும் தாத்தா பிணத்தைப் பார்க்கவில்லை கமலாவைத்தான் கல்யாண பெண்ணைப் பார்க்கின்ற மாதிரி பார்த்தார்கள்.

போன வருடம் தொடக்கத்தில் அசிஸ்டண்டா கடலூரில் கமலாவுக்கு உயர்பதவி கிடைத்தது. கமலாவும் அவளுடைய பிள்ளை

களும் கடலூரில் சேர்ந்தனர். அங்கு இருப்பவர்களிடம் கமலாவும் விநாயகமும் அண்ணன் தங்கையாக நடித்து வந்தனர். கமலாவின் பிள்ளைகளும் விநாயகத்தை மாமா முறை வைத்து தான் அழைத்தார்கள். கமலாவிற்கு அலுவலகத்தில் இரவு ஏழு மணி வரை வேலை நேரமாக இருந்தது. கமலா விநாயகத்திடம் இதெல்லாம் ஒரு விசயமா என்று அலட்சியமாக கூறிவிடுவாள். கமலா எப்பவும் எதையும் பெரிதாக எடுக்க மாட்டாள். உயிர்போகின்ற விசயத்தைச் சொன்னால் கூட அப்படியா என்று கேட்பாள். இதனாலேயே பலமுறை விநாயகத்திற்கும் கமலாவுக்கும் சண்டை வரும். அப்படி ஒரு நாள் பெரிய சண்டை வந்தது. அப்போது கமலா வீட்டில் இன்வெட்டர் மாட்டியிருப்பதை சொல்ல மறந்துவிடுகிறாள். சி.இ.ஓ கொண்டு வந்ததாகவும் அதை உங்களிடம் சொல்ல மறந்து விட்டதாக கூறினாள். **“சொல்றன் கேக்க மாட்டங்கிறான் சி.இ.ஓ.வா இருக்கான் எதித்துப் பேச முடியல. சொன்னாப் புரியல. ஆனா, நான்தான் பணம் கொடுத்தன்னா. அதுல எனக்குக் கொஞ்சம் நிம்மதி. ஆனா, சொல்றதுக்கு மறந்து போச்சின்னு சொல்றாளே”**(6) (இமையம் எங்கதெ,ப.24) என்று அவர் வாங்கி கொடுத்த இன்வெட்டரு க்கு தான் பணம் கொடுத்ததாக கமலா கூறினாள்.

கமலா அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு சி.இ.ஓ. காரிலிருந்து இறங்கி வருகிறாள். கமலா எதையும் கண்டு கொள்ளவில்லை. விநாயகத்தின் நினைவு கூட இல்லாமல் இருந்தாள். கமலா அவர் என்னை விட பெரிய அதிகாரி அவர் பேச்சை என்னால் தட்டமுடியாது. இன்னும் ஒரு வருடத்தில் அவர் ரிடேயர்ட் ஆகிடுவார். அது வரையும் அவர் பேச்சை மீற முடியாது. இது ஒரு விதமான நட்புறவு மட்டும் தான் என்றாள். ஒரு நாள் சி.இ.ஓ பிள்ளைகள் கமலாவை அவமானப்படுத்தினார்கள். அதை எதையும் கூறாமல் அமைதியாக நின்று கொண்டிருந் தாள். கமலாதான் இப்புதினத்தின் முதன்மை கதை மாந்தராக இமையம் அறிமுகப்படுத்தி கதையோட்டத்திற்கு வலுசேர்ப்பதைக் காண முடிகின்றது.

### விநாயகம்

விநாயகம் என்பவன் படித்து முடித்து வேலையில்லாத பட்டதாரியாக அறிமுகமாகி ன்றார். வேலைக்கு விண்ணப்பம் செய்வது அப்பாவிடம் காசு வாங்கி சோம்பேறியாக சுற்றித் திரிந்தான்.

**“வெதக்கிற அன்னிக்கிக் காட்டுக்குப் போவன். அப்பறம் அறுக்கிற அன்னிக்கித்தான் போவன். மத்த நாளுல எங்காலு காட்டுல படாது. மீறிப்பட்டாலும் படிச்ச புள்ள வெயிலுல வதங்கலாமா. போடா ஊட்டுக்கு ன்னு எங்கப்பா, அம்மா அனுப்பிடுவங்க”**(7) (இமையம் எங்கதெ ப.4)

திங்கள்கிழமை வந்து போன் பேசிட்டு போய் நோட்டு கொடுத்தாள். சில்லரை இல்லை அப்புறம் வந்தால் தாருங்கள் என்று விநாயகம் கமலாவிடம் முதல் முறையாக பேசினான். கமலா எப்போது வருவாள் என்று காவல் காக்க ஆரம்பித்துவிட்டான். நான்கு ஐந்து மாதங்களில் விநாயகம் கமலாவுக்கு தேவையான அனைத்து பொருள்களையும் வாங்கி கொடுக்க ஆரம்பித்தான். ஆனால் விநாயகத்தை கமலா மதிக்கவில்லை. கமலா என்ன சொன்னாலும் விநாயம் செய்வான்.

**“கமலா வேப்பங்காயத் தந்தா தின்னன், தித்திப்பா இருந்துச்சு. சுடுதண்ணியக் கொடுத்தா குடிச்சன், ஐஸ் தண்ணியா இருந்துச்சு, ஏன்னா அவதான் அப்ப எனக்கு முகம் பாக்குற கண்ணாடி. அவதான் உருவம். நான் அவ பின்னாலியே ஓடுறநிழலு”**(8) என்று விநாயகம் கமலா மேல் உயிராக இருந்தான். (இமையம் எங்கதெ ப.14)

விநாயகம் கமலாவின் வீட்டிற்கு அப்ப அப்ப வந்து போனான். கடலூருக்கு வந்த பின்பு விநாயகமும் கமலாவும் யாருக்கும் பயப்பட தேவையில்லாமல் இருந்தது. கமலாவின் வீட்டிற்கு பயமின்றி வரத் தொடங்கினான். கமலாவையும் பிள்ளைகளையும் கோயிலுக் கும் சினிமாவிற்கும் விநாயகம் அழைத்துச் செல்லுவான். விநாயகம் ஞாயிற்றுக்கிழமை தவறாமல் கமலாவீட்டிற்கு வருவான். சி.இ.ஓ பொருள்கள் எல்லாம் வாங்கி தருவது என எல்லா வேலைகளையெல்லாம் செய்ய ஆரம்பித்தது இவையெல்லாம் விநாயகத்திற்குத் தெரிய வந்து கமலாவிடம் கேட்டான்.

கமலா சி.இ.ஓ. காரிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்தும் பார்க்காத மாதிரி இருந்தான். பின்பு கமலாவிடம் அலுவலகத்தி லிருந்து எப்படி வந்தாய் என்று கேட்டான். கமலா உடனே நடந்து தான் வந்தேன் என்று கூறிவிட்டாள். விநாயகத்திற்கு உயிரே

நின்று போன மாதிரி இருந்தது. விநாயகம் கமலாவிடம் சி.இ.ஓ காரில் வரவில்லையா என்று கேட்டான். அப்போது கமலா உண்மையை மறைத்துக் கொண்டாள். விநாயகம் சட்டென்று கமலாவை அடிக்க கை ஏங்கினான். கமலாவிடம் இனிமேல் உன் வீட்டுக்கு வரமாட்டேன் உன்னிடம் பேசவும் மாட்டேன் இது சத்தியம் என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான். கமலாவிடம் பேசாமல் அவனால் இருக்க முடியவில்லை. விநாயகத்திற்கு மனசு பாரம்மாக இருந்தது. தூக்கம் கூட சரியாக வரவில்லை. மறுபடி ஒரு நாள் விநாயகம் கமலா வீட்டிற்கு வரும்போது சி.இ.ஓ கமலாவும் வீட்டில் இருந்தார்கள். விநாயகம் வந்தவுடனே சி.இ.ஓவிடம் சண்டை போட்டான். இனிமேல் கமலா வீட்டிற்கு வரக் கூடாது என்று கோபமாக ஊருக்கு வந்தான்.

என் தலைக்கு நேராக தரையில் அமர்ந்திருந்தாள் என் சின்னத் தங்கச்சி **“நான் அந்தப் பொம்பளக்கிட்ட பேசட்டுமா ண்ணான்னு கேட்டுச்சி. சண்டாயா? சண்ட வராத ஊடு எங்கஇருக்கு? சரியா ஆயிடும். ஒரு வாசாப்புடு. காலயிலிருந்து ஒன்னெ காணுமின்னு அப்பா எத்தன மொற ரோட்டுக்குத் தேடிக்கிட்டு போனாரு தெரியுமா? எத்தன தடவ போன்போடு, போன்போடு என்று சொன்னாரு தெரியுமா? ன்னு சொல்லிக்கிட்டே என் சட்டய எடுத்து என்னமோ வச்சிச்சி, பணமாத்தான் இருக்கணும்”**(9) (இமையம் எங்கதெ ப.42)

விநாயகம் கமலாவை கொலை செய்து விடலாம் என்று மறுபடியும் வந்தான் அப்போது கமலாவை சி.இ.ஓ மகன்கள் வந்து அவமானம் படுத்தினார்கள் இதை அறிந்த விநாயகம் சி.இ.ஓ வின் குடும்பத்தினரிடம் மன்னிப்பு கேட்டான். நீ யார் என்று கேட்டார்கள் நான் கமலாவின் அண்ணன் உறவு என்று கூறினான். விநாயகம் கமலாவை கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான். மறுநாள் கமலாவின் வீட்டிற்கு எப்பவும் போல வருகின்றான். அனைவரிடமும் சகஜமாக பேசுகிறான் பின்பு கமலாவை கழுத்தை நெறிக்க நினைக்கும் போது அவனால் முடியவில்லை. கமலாவின் பிள்ளைகள் நினைவுக்கு வந்தனர். அவர்களுக்காக கமலா உயிருடன் இருக்க வேண்டும் என நினைத்தான். ஆனால் உயிருடன் இருந்தால் போதும் நான் உன்னை நினைத்து கொண்டே இருந்து விடுவேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்று விட்டான். விநாயகம் இக்கதையில் முதன்மை கதாபாத்திரமாக தோன்றுகிறான். வேலையில்லாத பட்டதாரியாக விநாயகம் பாத்திரம் அறிமுகமாகிறான்.

**துணை மாந்தர்கள்**

**அம்பலவாணன்**

விநாயகத்தின் சித்தப்பா மகன் அம்பலவாணன் எஸ்.டி.டி கடை வைத்து நடத்தி வருபவன். அம்பலவாணன் அதிகாலையில் எழுந்து வேலைக்கு வந்து விடுவான். எஸ்டி.டி. கடையைத் திறந்து வைத்திருப்பான்.

**“எனக்குப் பத்து வருசத்துக்குப் பின்னால பொறந்தவன் இருவத்தி ரெண்டு வயசிலிலே கல்யாணத்தக் கட்டுனான். வரிசியா மூணு புள்ளெயப் பெத்தான். வேல முடிஞ்சி போச்சின்னு ராசாமாரி ஊர சுத்திக்கிட்டிருக்கான். தங்காரியத்தில கெட்டியான ஆளு. அவன் என்னெ எப்பியும் திட்டுவான்”**(10) (இமையம் எங்கதெ ப.39)

அம்பலவாணன் எப்போதும் சுறுசுறுப்பாக வேலை செய்பவன். அவன் எப்போதும் காட்டிலே வேலைபார்த்துக் கொண்டிருப்பான். விநாயகம் வீட்டில் தான் அம்பலவாணன் குடும்பமே வேலை பார்ப்பவர்களாக இந்நாவலில் இடம் பெற்றுள்ளனர்.

**வெங்கடேசன்**

வெங்கடேசன் என்பவன் ஒரு காலத்தில் தன் ஊர்க்கு துணி துவைப்பவனாகத் தான் இருந்தான். ஆனால் அவர் பெயரை மறைத்து ஒத்தக்கண்ணன் என்பதே பெயராகி விட்டது.

**“எங்க ஊரிலியே ஒத்தக் கண்ணன்னோ, வண்ணான்னோ கூப்புடாம ஒத்தக் கண்ணனோட சொந்தப் பேரச் சொல்லி வெங்கடேசன்னு முதல் முதலாகக் கூப்பிட்டது கமலாதான்”**(11) (எங்கதெ ப.7)

ஊர்மக்களின் துணிகளை எல்லாம் வெளுத்து கொடுப்பான். அதனால் அனைவரும் அவனுக்கு ஒத்தக்கண்ணன் என்று கூப்பிடுவார்கள். ஆனால் கமலா மட்டும் தான் உண்மையான வண்ணான் பெயர் சொல்லி கூப்பிடுவாள். ஊர் துணி வெளுக்கின்ற வண்ணானுக்கு கடைசியில் தானியத்தை கூலியாக கொடுப்பார்கள். ஆனால் கமலா மட்டும் தான் வாரம் வாரம் பணமாகக்

கொடுக்கிறாள்.

வெங்கடேசன் ஊர்மக்களின் துணி வெளுக் கின்ற வண்ணாக படைக்கப்பட்டுள்ளான். ஆனால் அவன் ஒருவரிடம் கூட அவர் கை நீட்டி பைசா வாங்குனது இல்லை. ஆனால் கமலாவிடம் மட்டும் வாங்கினார். அந்த காலம் வழக்கம் அப்படியாக இல்லை. இந்த கால வழக்கம் அப்படித்தான் இருந்தது. இன்னும் அவரை ஏதாவது ஒரு வேலைக்கா கத் தேடிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

### முருவம்மா

கமலா வீட்டில் கூலி வேலை செய்பவள் முருவம்மா. அவள் கமலா வீட்டில் வேலை பார்த்து வருகின்றாள். முருவம்மா கமலா வீட்டிற்கு வந்து வேலைகள் எல்லாம் முடித்து விட்டு மீதி இருக்கின்ற சோறு குழம்பு எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு செல்வாள். முருவம்மா எப்போதும் சுறுசுறுப் பாக வேலை பார்ப்பாள். முருவம்மா கெட்டிக்காரி **"எம் புள்ளைங் களுக்குக் கண்ணக் கொடுங்க சாமின்னு சொல்லி தன்னோட நாலுபுள்ளைங்களையும் சாயங் காலத்தில் கமலா ஊட்டுக்குப் படிக்கிறதுக்கு அனுப்புனா"**(12) (இமையம் எங்கதெ ப.7)

என்று குருவம்மா ஊர் கதையை எல்லாம் கமலாவிடம் சொல்லும் ஒரு பாத்திரமாக இப்புதினத்தில் படைக்கப்பட்டுள்ளது.

### பி.ஏ

பி.ஏ என்பவர் சூரப்புலி கமலாவின் வேலை களை எல்லாம் குறை கூறிக் கொண்டேயி ருக்கும் ஒரு துணைமாந்தராக அறிமுகமாகின்றார்.

**"மொழி பல பெருகிய பழிதீர்தே எத்துப்**
**புலம் பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்**
**முட்டாச் சிறப்பிற் பட்டினம்"**(13)
(பட்டினப்பாலை (216 -219)

என்று உருத்திரங்கண்ணனார் காட்டிய நாகரிகத்தின் படி பழமொழி கூறுகின்றார். காரணமில்லாமலே கமலாவை சத்தம் போடுபவர் பின்பு கமலா வேலைக்கு சேர்ந்து ஐந்தாறு மாதங்களில் அவளின் வேலைகளையெல்லாம் சி.இ.ஓ அலுவலக பியூனாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டார் என்று இந்நாவலில் கூறப்பட்டுள்ளது.

### சி.இ.ஒ

சி.இ.ஒ ஒரு துணை மாந்தராகத் திகழ்கின் றார். அவர் உயர் பதவி அலுவலராக அறிமுகமாகின்றார். கமலாவின் வீட்டு வேலைகளை செய்வது மட்டுமில்லாமல் மின் கட்டணம் செலுத்துவதிலிருந்து பிள்ளை களுக்கு நோட்டு, பேனா, பென்சில் என்று தேவையான பொருள்களை எல்லாம் வாங்கி தருவது என எல்லா வேலைகளையும் செய்ய ஆரம்பித்தார். சி.இ.ஒ விநாயகத்திடம் கோபமாக கடுமையாக பேசினான். கமலாவிற்கு நீ என்ன கணவனா அதிகாரம் செய்றதுக்கு இது ஒன்னும் உங்க ஊர் மாதிரி இல்லை என்றார். சி.இ.ஒ கமலாவிற்கு தேவையான அனைத்து வசதி வாய்ப்பு களையுமே ஏற்படுத்தித் தந்திருக்கிறார்.

கமலா வீட்டிற்கு முன்பு சி.இ.ஒ குடும்பத்தினர் வந்து தகராறு பண்ணிக் கொண்டு கமலாவும், சி.இ.ஒவும் போனில் பேசின தகவல்களைக் கொண்டு வந்து காட்டி னார்கள். இந்நாவலில் சி.இ.ஒ உயர் பதவி அலுவலர் பாத்திரமாக அறிமுகமாகின்றார்.

### முடிவுரை

நல்ல கதைக்களம் உலகில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் பயனள்ளதாகவும் ஏற்றுக் கொள்வதாகவும் அமைந்திருக்க வேண்டும். மனித சமுதாயத்தை மையமாகக் கொண்டு கதைக்களம் அமைய வேண்டும். இந்நாவலின் கதை வளர்ச்சிக்காக கமலா, விநாயகம், அம்பலவாணன், வெங்கடேசன், முருவம்மா போன்ற பாத்திரங்கள் படைத்து கதையில் வளர்ச்சிக்கு உதவுவதைக் காண முடிகிறது.

### துணைநூற்பட்டியல்


1. இமையம் - எங்கதெ, காமராசர் நகர், க்ரியா பதிப்பகம்,சென்னை-2015.
2. வி.நாகராசன் (உ.ஆ), பட்டினப்பாலை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், அம்பத்தூர், சென்னை
3. கா.அய்யாதுரைபிள்ளை - கழகப் பழமொழி அகரவரிசை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1952.
4. தமிழண்ணல் - தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, மு.ப ஏப்ரல் - 2008.
5. தண்டாயுதம்.இரா - சமூக நாவல்கள், தமிழ் புத்தகலாயம், பதிப்பு 1988.